Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 29, 2024

வெள்ளிக்கிழமை மார்ச் 29, 2024 | ஒளி: 09 கதிர்: 223 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வரி குறைப்பு

அரிசி மற்றும் பெரிய வெங்காயத்துக்கான விசேட பண்ட வரி வியாழக்கிழமை (28) முதல் குறைக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி ஒரு கிலோ கிராம் அரிசிக்கு 65 ரூபாவாக இருந்த விசேட பண்ட வரி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி வரை ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### இஸ்லாமியத்திற்கு எதிரான கருத்து

# ஞானசாரருக்கு கடூழிய சிறை

### இலங்கையில் இன, மத மற்றும் ஒற்றுமையைச் சீர்குலைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்

பொதுபல சேனா (பொதுபல சேனா) பொதுச் செயலாளர் இஸ்லாமிய மதத்திற்கு எதிராக வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக கலபொட அத்தே ஞானசார தேரருக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரருக்கு 100,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, வியாழக்கிழமை (28) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## வீதி விபத்தில் வைத்தியர் பலி

மு.தமிழ்ச்செல்வன்



முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் அகிலேந்திரன், புதன்கிழமை (27) மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் மரணமடைந்துள்ளார்.

புளியங்குளம் பகுதியில் அவர் பயணம் செய்த வாகனம் ரிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார்.

தொடர்ச்சி P2

## “பெண்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்”

வடக்கு மாகாணத்தில் மாத்திரமின்றி, நாடளாவிய ரீதியில் பெண்கள் நாளாந்தம் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், தமது அடிப்படைத் தேவைகளைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெண்களுக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பெண்களுக்கான உரிமைகள் தொடர்பில் குரல் எழுப்ப முன்னர், தமது அடிப்படைத் தேவைகளைத் தயக்கமின்றி தெரிவிப்பதற்கும், அதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பெண்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென ஆளுநர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகளிர் தின நிகழ்வு, மருத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (27) நடைபெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “மீதமிருக்கும் காணிகளை மீட்கும் முயற்சி தொடரும்”



நடராசா கிருஸ்ணகுமார்

சிறிய பிரச்சினைகளைப் பெரிதாக்கித் தீரா பிரச்சினையாக்காது அவற்றைத் தீர்வு கிடைக்கும் வகையில் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மீதமிருக்கும் மக்களின் காணிகளையும் மீட்பதற்கான அனைத்து முயற்சிகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு அவை அனைத்தும் கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கான நடவடக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

## “முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது”

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 50 இலட்சம் முட்டைகள் நாட்டில் கையிருப்பில் உள்ளதாகவும், இதன் காரணமாக முட்டை இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரச வர்த்தக இதர சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தனிநபர் செலவு ரூ.17,000 ஆகும்

### உத்தியோகபூர்வ வறுமைக் கோடு தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி தேசிய மற்றும் மாவட்ட அளவில் விலை மாற்றங்களைக் கணக்கில் கொண்டு சரிசெய்யப்படுகிறது



தனிநபர் ஒருவரின் மாதாந்த செலவு அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## “எந்தவோர் அரசியல் வாதியும் வரவில்லை”

### போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் விசனம்

வி.ரி.சகாதேவராஜா

தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் முன்னெடுக்கப்படும் போராட்டம், வியாழக்கிழமை (28) நான்காவது நாளாகத் தொடர்ந்தது. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பெருமளவில் பொதுமக்கள் அடையாள அமைதியாகக் கூடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## மருதமுனை இரட்டை படுகொலை: தந்தைக்கு விளக்கமறியல்

பாறுக் ஷிஹான்

மருதமுனை இரட்டை படுகொலை சந்தேக நபரான தந்தையை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்ட கல்முனை நீதிவான் நீதிமன்றம், வழக்கை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘தோட்ட சமூகம்’ அல்ல; மலையக சமூகமாகும்



நாட்டிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களை கொண்டு வரும் ‘தோட்ட சமூகம்’ இதுவரை ‘தோட்டத் தொழிலாளர் சமூகம்’ என்றே அழைக்கப்பட்டாலும் நாட்டுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களை கொண்டு வரும் இவர்களை ஐக்கிய மக்கள் சக்தி பல வருடங்களுக்கு முன்பிருந்தே மலையக சமூகம் என மரியாதையுடன் அழைத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




### அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும்

## வழிபாடுகளுக்காக 7 ஆலயங்கள் விடுவிப்பு

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 21 வழிபாட்டுத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அவற்றில் 07 ஆலயங்கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “33 சதவீத சம்பள உயர்வை ஏற்கமுடியாது”

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்



“மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கே பெருந்தோட்ட கம்பனிகள் முன்வந்துள்ளன. இதனை ஏற்கமுடியாது. 1,700 ரூபாய் அவசியம் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக நிற்கின்றோம்.” என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான கலந்துரையாடலொன்று தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் தொழில் அமைச்சில் புதன்கிழமை (28) நடைபெற்றது.

தேசிய தொழிலாளர் சபையில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் இச்சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஞானசாரருக்கு கடூழிய சிறை

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, குரகல விகாரை குறித்து பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இலங்கையில் இன, மத மற்றும் ஒற்றுமையைச் சீர்குலைத்த குற்றச்சாட்டின் பேரில் சட்டமா அதிபர் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

## “பெண்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்”

அரசியலிலும் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டுமெனக் கூறிய ஆளுநர், பெண்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

அத்துடன், பாதிக்கப்படும் பெண்ணொருவரை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகள் அவசியம் எனவும், அவ்வாறானவர்களின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். பெண்மையைப் போற்றி, அவர்களின் மகத்துவத்தை மதிக்கின்ற நாடாக இலங்கை மாற வேண்டும் எனவும், இந்த விடயங்கள் சாத்தியப்பாடற்று போனால், மகளிர் தினம் கொண்டாடுவதில் பலன் இல்லை எனவும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.



## ‘தோட்ட சமூகம்’ அல்ல; மலையக சமூகமாகும்

மலையகத் தோட்டங்களைச் சுற்றி வாழும் சமூகத்தை லயன் அறைகளில் வைத்து தொடர்ச்சியாகத் தோட்டத் தொழிலாளர்களாக்காமல் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக்குவதுதான் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகும். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இச்சமூகத்திற்கு பிரஜா உரிமையை வழங்கியது போல இச்சமூகத்திற்குக் காணி உரிமையை வழங்கி, தமது வாழ்வாதாரத்தைத் தன்னம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்லும் சிறிய தேயிலைத் தோட்ட சமூகத்தை உருவாக்குவோம் என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 134ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள்,இரத்தினபுரி, பெல்மடுல்ல ஸ்ரீ கிருஷ்ண மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மார்ச் 26ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டில் பெருந்தோட்டம் சார்ந்த மக்கள் மாத்திரமன்றி, வேலையில்லா இளைஞர் சமூகத்தினரும் உள்ளனர். சாதி, மதம், கட்சி, நிற வேறுபாடின்றி வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாடும் இளைஞர் சமுதாயத்திற்கு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத இடங்கள் வழங்கப்பட்டு, புதிய விவசாயத் தொழில்நுட்பத்தின் மூலம் அதிக உற்பத்தியை அடையும் விவசாய முறைக்கு இட்டுச்செல்ல வழி வகுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நெதர்லாந்தையும், பெரும் பாலைவனங்களையும் கூட வளமான நிலமாக மாற்றிய இஸ்ரேல் போன்ற நாடுகளால் அதைச் செய்ய முடிந்தால், இயற்கையின் வரப்பிரசாதமான நமது நாட்டின் நில வளத்தைப் பயன்படுத்தி, அதிக உற்பத்திகளைப் பெறலாம். ‘முடியாது’ என்பது கிடையாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கறுப்பினத்தவரான பராக் ஒபாமா, சிறுபான்மை கறுப்பின மக்கள் வாழும் அமெரிக்காவின் முழு அமெரிக்கர்களுக்குமான ஜனாதிபதியாகத் தெரிவானார். மலையக பெருந்தோட்ட சமூகம் என்பதில் பெருமிதம் கொள்ளுங்கள். பெருந்தோட்டத்துறையில் உள்ள தொழிலாளர் சமூகம் செய்த தியாகங்களினால் தான் இன்றும் எமது நாடு ஓரளவுக்குச் சுவாசிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

சமீபகால வரலாற்றில் நமது நாடு வங்குரோத்து நிலையை எட்டவில்லை. இது அசாதாரணமானது. ஒரு சட்டகத்தில் சிக்கிக் கொள்ளக்கூடாது, சட்டத்திற்கு வெளியே முடிவுகளை எடுக்கவேண்டும். வங்குரோத்து நிலையில் உள்ள எமது நாட்டுக்கு புதிய விடியல், புதிய பயணம், புதிய வேலைத்திட்டம் அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

20 இலட்சம் ரூபாவை கொடுத்துப் பெயர்ப் பலகை பதித்து தேசிய பாடசாலைகளை உருவாக்கும் கொள்கை ஐக்கிய மக்கள் சக்தியிடம் இல்லை. 20 இலட்சம் செலவழித்து வெறும் பெயர்ப் பலகைகள் பதிப்பதற்குப் பதிலாக அந்த 20 இலட்சத்தில் ஒரு பாடசாலையில் இரண்டு ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவலாம். எனவே, பெயர்ப் பலகைகளுடன் சுருங்கிய தேசியப் பாடசாலைகளுக்கு அப்பாற்பட்ட, அனைவருக்கும் தரமான கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும் எனவும் சஜித் தெரிவித்தார்.

## “மீதமிருக்கும் காணிகளை மீட்கும் முயற்சி தொடரும்”

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை (28) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட காணிகளுடன் இன்னும் பல காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என நம்புவதாகத் தெரிவித்த அமைச்சர், வனவள திணைக்களம் தொல்பொருள் திணைக்களம் போன்றவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளும் அதில் உள்ளடங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்து விடுவிக்கக் கூடிய பகுதிகளாகப் பாதுகாப்பு தரப்பினரால் 21 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள. யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வழிபாட்டிடங்கள் உள்ளிட்ட மக்களின் குடியிருப்பு மற்றும் விவசாயக் காணி நிலங்களை விடுவிப்பதற்குப் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடிவருவதாகவும் விரைவில் சாதகமான நிலை உருவாக்கப்படும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனிநபர் செலவு ரூ.17,000 ஆகும்

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஒருவருக்கு தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச மாதாந்தச் செலவு சராசரியாக 17,014 ரூபாயாக அதிகரித்துள்ளதாகத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆண்டு டிசெம்பரில் இதன் மதிப்பு 16,524 ஆக பதிவானது.

ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் மாதாந்தச் செலவு கணக்கிடப்பட்டுள்ளதாகவும், கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்களே அதிக செலவினங்களைச் சுமக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் தனிநபர் மாதாந்தச் செலவு 18,350 ரூபாயாகவும், கம்பஹா மாவட்டத்தில் 18,256 ரூபாயாகவும், நுவரெலியா மாவட்டத்தில் 17,892 ரூபாயாகவும் உள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, மொனராகலை மாவட்டத்திலிருந்து மிகக் குறைந்த தனிநபர் செலவீனம் பதிவாகியுள்ளதுடன், அது 16,268 ஆகும்.

உத்தியோகபூர்வ வறுமைக் கோடு தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி தேசிய மற்றும் மாவட்ட அளவில் விலை மாற்றங்களைக் கணக்கில் கொண்டு சரிசெய்யப்படுகிறது.

## மருதமுனை இரட்டை ...

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் இரு பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் வியாழக்கிழமை (28) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்பிள்ளைகளின் தந்தை, பெரிய நீலாவணை பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டன, குறித்த சம்பவத்தில் மரணமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹம்மது மிர்சா முகமது கலீல் (63 வயது) என்பவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவு பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள முஹம்மது கலீல் முகம்மது றிகாஸ்(வயது-29) முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா(வயது-15) ஆகியோர் தந்தையால் மார்ச் 14 படுகொலைச்செய்யப்பட்டனர். மரணமடைந்த பிள்ளைகளின் தாய் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## “33 சதவீத சம்பள ....

இதன்போது, அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் வடிவேல் சுரேஷ், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.

பெருந்தோட்டக் கம்பனிகளால் சம்பள உயர்வு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவு தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கம்பனிகளால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையைக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியதாவது,

“ பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்க கம்பனிகள் முன்வந்துள்ளன. எனினும், இதனை ஏற்கமுடியாது என அனைத்து தொழிற்சங்கங்களும் தெரிவித்தன. 1,700 ரூபாவையே கோரினோம். அந்த தொகையில் உறுதியாக நிற்கின்றோம் என தெளிவாக எடுத்துரைத்தோம்.

சம்பள நிர்ணய சபையைக் கூட்டுவதற்குத் தொழில் அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் நல்ல தீர்வு கிடைக்கும்.

**“ பெருந்தோட்டக் கம்பனிகளால் சம்பள உயர்வு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவு தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கம்பனிகளால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையைக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன**

நாட்கூலி முறைமை பொருத்தமற்றது. எனவே, நிரந்தரமானதொரு தீர்வை நோக்கி நகர வேண்டும். அந்த நிரந்தர தீர்வை அடையக் காலம் எடுக்கும். அதுவரை ஆயிரம் ரூபாவிலேயே இருக்க முடியாது. அதனால்தான் 1,700 ரூபாய் கோருகின்றோம்.

ஒரு குடும்பமொன்று 3 வேலைகள் சாப்பிட்டு வாழ வேண்டுமெனில், 76 ஆயிரம் ரூபாய் அவசியம். ஆனால் பெருந்தோட்ட பகுதிகளில் சராசரி வருமானம் 42 ஆயிரமாக உள்ளது. இதனை ஏற்கமுடியாது. அனைத்து தொழிற்சங்கங்களும் அரசியல் செய்யாமல், ஒற்றுமையாக இருந்தால் தீர்வை அடையலாம்.” என்றார்.

## வரி குறைப்பு

அத்துடன், பெரிய வெங்காயத்தின் இறக்குமதிக்கான வரி 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை கிலோ கிராம் ஒன்றுக்கு 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

## வீதி விபத்தில் வைத்தியர் பலி

அவரை வவுனியா வைத்தியசாலைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டு அங்குத் தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். .

மருத்துவ நிர்வாக முதுமாணிப் பட்டதாரியான இவர், வவுனியா வைத்தியசாலை மற்றும் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளரும் ஆவார்.

## “முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது”

சதொச நிறுவனங்களுக்கு நாளாந்தம் சுமார் 5 இலட்சம் முட்டைகள் விநியோகிக்கப்படுவதாகவும், பண்டிகைக் காலங்களில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் தலைவர் தெரிவித்தார்.

## “எந்தவோர் அரசியல் வாதியும் வரவில்லை”

இந்தப் போராட்டம் கடந்த மூன்று தினங்களாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், எந்தவொரு தமிழ் அரசியல் வாதியும் தங்களைப் பார்க்க வரவில்லை விசனம் தெரிவிக்கின்றனர்.

“நாம் இதற்குத் தானா வாக்களிப்பது? எங்களுக்கு உரிமை பிரச்சினை ஏற்படுகின்றபோது இப்படி இவர்கள் பாராமுகமாக இருப்பது வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது” என்றனர்

அரச சேவையைப் பெறும் தங்களின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் இனவாத அதிகார அத்துமீறலுக்கு அரசு இடமளிக்கக்கூடாது என்றும், இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளருக்கும் இனவாத அரசியல்வாதிகளுக்கும் தங்கள் கண்டனங்களை மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளைப் பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாகத் திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயமாகும் என்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாகத் தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களைப் பெற்று மக்களுக்கான அரச சேவையைப் பெறுவதற்கு முடியாமல் கடந்த 30 வருடங்களாகத் தவித்துக் கொண்டிருக்கும் இப் பிரதேச மக்கள் அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். நான்காவது நாளாகவும் போராட்டம் தொடர்கிறது. பெருமளவான பொது மக்களும் இணைந்துள்ளனர்.

## வழிபாடுகளுக்காக 7 ஆலயங்கள் விடுவிப்பு

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கட்டுவன், வசாவிளான் மற்றும் பலாலி ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களே வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படவுள்ளன.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித வழிபாடுகளையும் நிகழ்த்தாத குறித்த ஆலயங்களுக்கு முதலில் மக்கள் செல்ல வேண்டும் எனவும், இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.ஷ

மக்கள் அங்கு செல்லும் போது ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடிப் பரிசீலிக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் கூறினார்கள். இதேவேளை, 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்குமாறு துறைசார் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகும், எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் யுக்திய விசேட சுற்றிவளைப்பின் ஊடாக கைது செய்யப்படும் நபர்களுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொள்ளாது, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முழு வலையமைப்பையும் கண்டுபிடிக்க வேண்டுமென ஆளுநர் வலியுறுத்தினார்.

# “வடக்கில் 50,000 வீடுகள்”

■ யது பாஸ்கரன்

வடமாகாணத்திற்கு, தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 50,000 சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்டம் ஜனாதிபதியின் இணக்கத்தோடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க வடக்கு மாகாணத்தில் முன்னர் வளங்கவென தீர்மானிக்கப்பட்ட 25,000 வீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக 50,000 வீடுகள் வழங்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஏற்கெனவே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு, அது நிறைவு செய்யப்படாதவர்களும், மீள்குடியேற்றத்தின் பின்னர் காணி இல்லாமல் போனவர்களும், சொந்தக் காணி இருந்தும் இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்கள் மற்றும் வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையவர்களும் இந்த விசேட திட்டத்திற்குள் உள்வாக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

> “ வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையவர்களும் இந்த விசேட திட்டத்திற்குள் உள்வாக்கப்படுவர்






நன்னடத்தை பாடசாலை மேற்பார்வையாளர்

## பெண்ணுக்கான விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

■ பாறுக் ஷிஹான்

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணின் விளக்கமறியல் 14 நாட்களுக்கு நீதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை (27) மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில், பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு, 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுடன் இருந்த பிக்கு கைது

தியத்தலாவ பிரதேசத்தில் உள்ள தங்குமிட விடுதியில் பெண்ணொருவருடன் இருந்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரலந்த பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு விகாரையைச் சேர்ந்த 45 வயதானவர் பிக்கு, அதே பகுதியில் வசிக்கும் திருமணமான 40 வயதான பெண் ஒருவருடனேயே இருந்துள்ளார்.

குறித்த விடுதிக்கு மாற்றுப்பெயருடன் பெண்ணொருவர் வந்துள்ளதாக தியத்தலாவ



பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து, அந்த விடுதியில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தமிழக கடற்றொழிலாளர்கள் மூவருக்கு சிறை

■ எம்.றொசாந்த்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 36 தமிழக கடற்றொழிலாளர்களில் மூவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 33 பேருக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட 15 தமிழக கடற்றொழிலாளர்களும், 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 கடற்றொழி லாளர்களினதும் வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில்



புதன்கிழமை (27) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, 36 தமிழக கடற்றொழிலாளர்களும் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர்களில் இரண்டு படகோட்டிகளுக்கு 06 மாத சிறைத் தண்டனையும் மற்றுமொரு கடற்றொழிலாளிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும், அத்துமீறி நுழைந்தமையால், அவருக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய 33 கடற்றொழி லாளர்களுக்கும் 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அதனை 05 வருடங்களுக்கு ஒத்திவைத்த நீதவான், கைப்பற்றப்பட்ட படகுகளில் ஒரு படகின் உரிமையாளர் கைது செய்யப்பட்டவர்களுக்குள் இருந்தமையால் , குறித்த படகினை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய இரு படகுகளுக்கான விசாரணை தொடர்பில் வழக்கு திகதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கன்று ஈன தயாராக இருந்த 2 மாடுகள் வெட்டப்பட்டுள்ளன

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்வேரி பகுதியில் கன்று ஈனுவதற்கு தயாராக இருந்த இரண்டு மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை வெல்வேரி பகுதியில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வந்த மாடுகளில் இரண்டு எருமை மாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) இரவு களவாடப்பட்டு மாட்டுப்பட்டியில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் வைத்து இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன. திருகோணமலை பண்ணையாளருக்குச் சொந்தமான மாடுகளே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை (25) காலை பால் கறப்பதற்காகப் பண்ணைக்குச் சென்றபோது சம்பவத்தைக் கண்டு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும், 8 மாதம் மற்றும் 4 மாத கன்றுகளை வயிற்றில் கொண்டிருந்த இரு மாடுகளே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளதாகவும் இவை தலா 5 இலட்சம் பெறுமதியானவை எனவும் பண்ணையாளர் தெரிவிக்கின்றார்.

கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்ற பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை மற்றும் பாதுகாப்பு இன்றி பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். இதனால் கால்நடைகளை வளர்ப்பைத் தொடர்ச்சியாகக் கைவிட்டு வருகின்றார்கள். எனவே அரசாங்கம் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமான செயற்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் அதன் உற்பத்திகளையும் அதிகரிக்க முடியும் என பண்ணையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





## இரத்தினபுரியில் புதிய நகர பூங்கா

■ சிவா ஸ்ரீதரராவ்

இரத்தினபுரி புதிய நகர பூங்கா (New Town Park) அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு புதன்கிழமை(27) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர ஆகியோர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.


மேற்படி, இரத்தினபுரி புதிய நகர பூங்கா அமைப்பதற்காக அரசாங்கத்தின் மூலம் 1,000 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி கட்டுமான பணிகள் அனைத்தும் சப்ரகமுவ மாகாண சபையும், இலங்கை இராணுவமும் இணைந்து மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

அம்பாந்தோட்டை- லுனுகம்வெஹர பகுதியில் உள்ள கடையொன்றிற்கு அருகில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் வியாழக்கிழமை (28) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

லுனுகம்வெஹர பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய கெலும் துஷார ஹேவத் இப்பா என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு நபருக்கும் இவருக்கும் இடையில்




நீண்டகாலமாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கத்தரிக்கோலால் குத்தி ஒருவர் கொலை

கத்தரிக்கோலால் குத்தி 36 வயதுடைய நபர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவருக்கும் சந்தேக நபரொவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் எல்லை மீறியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்துள்ளதாக தெரிவித்த கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.



## வலய பாடசாலைகளுக்கு புதிய பணிப்பாளர் விஜயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் புதிதாக வலயக் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றுக்கொண்ட எம்.எம்.ஜவாத் ஓட்டமாவடி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு புதன்கிழமை(27) விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

பிரதேச பாடசாலைகளுக்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள தேவைப்பாடுகளை அதிபர்களிடம் கேட்டறிந்து, பாடசாலை வளங்களை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, பிரதிக் கல்விப் பணிப்பாளரும் ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர், அலுவலக உத்தியோகத்தர் எம்.நியாஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆசை வார்த்தைகளுக்குள் சிக்கி விழிப்பிதுங்கி நிற்காதீர்கள்

அனைவரும் அல்ல, ஒரு சிலர் குறுக்கு வழியில் சம்பாதிக்கவே முயற்சிக்கின்றனர். சிலர் மிக சூட்சுமமாக சம்பாதித்துக் கொள்கின்றனர் இன்னும் சிலர் கையும் களவுமாக மாட்டிக்கொள்கின்றனர். எனினும், நீதியாகவே செல்லவேண்டுமென்று பயணிப்போர் மெதுவாகச் செல்கின்றனர்.

ஒரு சில சந்தைகளுக்குச் சென்றால், மரக்கறிகள், பழங்கள் மற்றும் மீன் வகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் அழகாக அடுக்கியிருக்கும். எனினும், நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது, வியாபாரிகள் தங்களுடைய பக்கத்தில் இருந்தே பொருட்களை எடுப்பர், நுகர்வோர் பக்கத்தில் இருக்கும் பொருட்களை எடுக்க நுகர்வோருக்கு இடமளிக்கமாட்டார்கள்.

சரிந்து விழுந்து விடும் என்பதற்காக இவ்வாறு வியாபாரிகள் செய்கின்றனர் என பலரும் நினைக்கக்கூடும். எனினும், ஓரளவுக்குப் பழுதடைந்த பொருட்களை எந்தவகையிலாவது விற்றுத் தீர்த்து விடவேண்டும் என்ற நோக்கிலேயே வியாபாரிகள் பலரும் இவ்வாறு செய்கின்றனர் என்பது பலருக்கும் தெரியாது.

ஆசையாக கூவியழைக்கும் வார்த்தை ஜாலங்களுக்குச் சிக்கி, கையிலிருந்த சிறுதொகை பணத்தையும் பெரும்பாலானவர்கள் இழந்து விடுவர். பேராசைப்பட்டு பெருந்தொகையை இழக்கும் சம்பவங்கள் ஏராளம். இதில், வெளிநாட்டுக்குச் செல்லப்போய் பலரும் சிக்கிக்கொண்டுள்ளனர். பணத்தை இழந்துவிடுகின்றனர்.

மிக நாசுக்காகப் பேசி பல இலட்சம் ரூபாயைப் பலரும் கறந்து விடுகின்றனர். வெளிநாட்டு மோகத்தில் மூழ்கியிருப்போர் பெருந்தொகையை இழந்துவிடுகின்றனர். இல்லையேல் இறுதியில் சிக்கிக் கொள்கின்றனர். அவ்வாறான சம்பவங்கள் ஏராளம் நாட்டில் நடைபெறுகின்றன.

பெண் பார்க்கச் சென்றவரிடம் வெளிநாட்டு மோகத்தைக் காண்பித்து அவரிடமிருந்து 18 இலட்சம் ரூபாயைக் கறந்த சம்பவம் வடக்கில் இடம்பெற்றது. இந்நிலையில், கனடாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி, பெருந்தொகையான பணத்தைக் கறந்துவிட்டு, கைகழுவி விட்டுவிடுகின்றனர். இவையெல்லாம் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு விமானங்களில் ஊடாக செல்லமுயன்று சிக்கிக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி, கடல் மார்க்கமாகச் சட்டவிரோதமான முறையில் சென்றாலும், இந்தியா அவர்களை ஏற்றுக்கொண்டு, அகதி முகாம்களில் தங்கவைத்துக் கவனித்துக் கொள்கின்றது. அவுஸ்திரேலியா, பலரையும் திருப்பியனுப்பியுள்ளது.

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரவேண்டாம். அவ்வாறு வந்தால் ஒருபோதும் புகலிடம் கிடைக்காது என அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது. சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லப்போய் சிக்கிக்கொண்டவர்கள் தொடர்பிலான செய்திகள் அண்மைய காலங்களில் குறைவாகவே உள்ளன.

ஆகையால், குறுக்குவழியில் சம்பாதிக்கவும், குறுக்குவழியில் செல்வதற்கும் யாரும் முயற்சிக்கக்கூடாது. ஒவ்வொன்றுக்கும் நேர்வழி இருக்கத்தான் செய்கின்றது. அதற்குச் செலவாகும். காலமும் நீண்டுகொண்டே செல்லும் எனினும், முயற்சியைக் கைவிட்டுவிடக்கூடாது. குறுக்குவழியில் செல்வதால் இழப்புகளே அதிகமாகும் என்பதை நினைவில் கொள்க.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இந்த ஜகம் (உலகம்) யுகம் பல கடந்தாலும் கூட இன்னமும் இங்கு வாழ்ந்த மாந்தர்களின் ஆணவம் செருக்கு இன்னமும் அழிந்ததாகத் தெரியவில்லை.

ஆணவம் அழியாது. ஆனால், ஒடுங்கும் என்றே சொல்லப்படுகின்றது. சாதாரண மனிதர்களில் இருந்து மாபெரும் அறிஞர்கள், மன்னர்கள், தனவந்தர்கள் என எல்லோருமே உண்மையான பிறப்பின் பெருமையை அறியாது. ஆணவ முனைப்புடன் வாழ்ந்ததால், தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள்.

இது யார் தப்பு? இயற்கையின் விதி அழுத்தத்திற்கு எதிர்வினையாக அதே அழுத்தம் உண்டு. இந்த சுழற்சி நிற்பதும் இல்லை. அன்பைக் கொடுத்தால் மாபெரும் அன்பு தேடிவரும்.

கலவரம், அராஜகம், எளிய மக்கள் மீது வீரம் காட்டுதல், மக்களிடையே பிரிவுகளை வளர்த்துப் பிரிய வைத்தல், எல்லாமே ஆணவத்தின் மறுவடிவம். கெட்டதை மட்டும் செய்வேன் என துஷ்டர்கள் செய்தால் அது அவர்கள் நெஞ்சத்தினுள் புதைத்த கறல் அல்லவா? அறம் இவர்களை அறுத்தெறியும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 46:

# தமிழீழத் தனி நாடு என்ற முதற்கோணல்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1972 இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு, தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்கள், துரையப்பா கொலையைத் தொடர்ந்த பொலிஸ் கெடுபிடிகள் ஆகியன தமிழ் இளைஞர்கள் மத்தியில் மிகுந்த கோபத்தையும் வெறுப்புணர்வையும் உருவாக்கியது. இது பழிவாங்கும் கொலைகளாக ஒருபுறம் நடந்தேற மறுபுறம் தமிழ்த் தேசிய வாத வெறியைத் தமிழரசுக் கட்சியினர் உருவாக்கப் படாத பாடுபட்டுக் கொண்டிருந்தனர். தமிழரசுக் கட்சியினரிடம் தமிழ் மக்களின் உரிமைகளை எவ்வாறு வெல்வது என்பது தொடர்பில் வேலைத்திட்டம் எதுவுமே இருக்கவில்லை. எனவே, தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைக்க இரண்டு விடயங்களைக் கையிலெடுத்தனர். முதலாவது இளைஞர் வன்முறைக்கான மௌன அங்கீகாரம். இரண்டாவது, தமிழருக்கான தனிநாடு என்ற கோரிக்கை.

தமிழரின் முதலாவது அரசியல் படுகொலை துரையப்பாவினுடையது என்று கொள்ளப்பட்டாலும், அது முதல் கொலையல்ல. ஆனால், இரண்டு காரணங்களுக்காக அதுவே, முதலாவது அரசியற்கொலை என்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. முதலாவது, துரையப்பா தமிழர் நலனுக்கு எதிரானவர் என்று தமிழ்த் தேசியவாதிகள் கட்டமைத்த பிம்பமும் அவர் வகித்த மேயர் பதவியும் கொலையாளியை உயர்ந்த பதவியுடையவராக்கியது. எனவே, அக்கொலை முக்கியமானது இரண்டாவது, பிரபாகரனே இக்கொலையைச் செய்தவராகையில் அந்த முதன்மையிடத்தை அவருக்கு வழங்கும் நோக்கம். ஆனால், துரையப்பா கொல்லப்படுவதற்கு முதலே 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இரும்பு மனிதரெனப்பட்ட ஈ.எம்.வி. நாகநாதனை நல்லூர்த் தொகுதியில் தோற்கடித்த சி.அருளம்பலத்தின் வெற்றிக்குப் பிரதான ஆதரவாக இருந்த நல்லூர் கிராம சபைத் தலைவர் குமாரகுல சிங்கத்தைத் துரோகியெனக் கூறி இளைஞர் பேரவையைச் சேர்ந்தோர் சுட்டுக்கொன்றனர்.

இக்காலப்பகுதியில் ‘துரோகி’ முத்திரை வழங்கப்பட்டவர்கள், கொன்றொழிக்கத் தகுதியானவர்கள் என்று ஒரு கதையாடல் கட்டமைக்கப்பட்டது. இதில் முதலிடத்தில் அப்போதைய யாழ். மேயராகவும் செல்வாக்குள்ளவராகவும் இருந்த துரையப்பாவும் அடுத்த இடங்களில், அமிர்தலிங்கத்தைத் தோற்கடித்த முன்னாள் பாடசாலை அதிபர் எஸ்.தியாகராசாவும் ஈ.எம்.வி.நாகநாதனைத் தோற்கடித்த. சி.அருளம்பலமும் இருந்தனர். இது ‘துரோகிப்’ பட்டத்தின் நோக்கங்களைத் தெளிவுபடுத்தியது. தமிழரசுக் கட்சி தனது அரசியல் எதிரிகளைத் துரோகியாகச் சித்திரித்து அவர்கள் மீது வன்முறை ஏவுவதை அனுமதித்தது.

1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் யாப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பதவி விலகியிருந்தார். (புதிய யாப்பு நடைமுறைக்கு வந்து நான்கு மாதங்களின் பின்னரே அவர் பதவியைத் துறந்தார்) அத்தொகுதிக்கான இடைத்தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டே தாமதப்படுத்தியது. 1975இலேயே இத்தேர்தல் நடந்தது. இதில் எஸ்.ஜே.விசெல்வநாயகம் போட்டியிட்டார். இந்தத் தேர்தல் பிரசாரத்தின்போது தமிழரசுக் கட்சி ‘தமிழீழம்’ என்ற கருத்தை முன்வைத்தது.

1970கள் வரை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தனி நாட்டையோ, தமிழீழக் கோரிக்கையையோ, ஆதரிக்கவில்லை. 1960களில் தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்ட, ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் இஸ்ரேலை ஒரு முன்னுதாரணமாக நோக்கினர். சில தமிழரசுத் தலைவர்களின் இஸ்ரேல் விஜயமும், இஸ்ரேல் உருவாக்கத்தில் சர்வதேச சமூகத்தின் உதவியும் இதற்கு வலுவூட்டின. ஆனால், இந்த முன்னுதாரணத்தைப் புறந்தள்ளிய செல்வநாயகம், தமிழீழம் முடிவை 1970களின் நடுப்பகுதியில் வந்தடைந்தார். அதை அவர் முழு மனதோடு ஏற்றாரா என்பது இன்னமும் விவாதத்திற்குரியது.

இக் காலகட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தான் தனி நாடாகும் போராட்டம் உச்ச நிலைக்கு வந்திருந்தது. பங்களாதேஷ் என்ற நாடு உருவானது. அதை இயலுமாக்கியவர் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியாவார். 1971இல் இடம்பெற்ற கிழக்கு பாகிஸ்தான் பிரிவினையும் அது பங்களாதேஷ் எனும் தனி நாடானமையும் தமிழரசுக் கட்சியின் ‘தனி நாட்டுக் கனவுக்கு’ மிகுந்த வாய்ப்பானது. ‘அன்னை’ இந்திராவும் ‘தாய்நாடு’ இந்தியாவும் தமிழ் மக்களுக்குத் தமிழீழம் என்ற தனி நாட்டை உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கை ஊட்டப்பட்டது. இடைத் தேர்தலில் செல்வநாயகம் அமோக வெற்றி பெற்றார். அது தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கைக்குக் கிடைத்த மக்கள் ஆதரவு எனப் பிரசாரம் செய்யப்பட்டது.

இவ்வாறு தமிழீழம் குறித்து நம்பிக்கையைத் தமிழரசுக் கட்சியினர் மக்கள் மத்தியில் வளர்த்துக் கொண்டிருக்கையில் முற்போக்கு இடதுசாரிகள் தமிழீழம் சாத்தியமில்லை என்று கருத்துரைத்தனர். அதற்கான தமது விளக்கங்களையும் முன்வைத்தனர். இது தமிழீழம் சாத்தியமா சாத்தியமில்லையா என்ற விவாதத்திற்கு வழிகோலியது. இரு தரப்பினரிடையே இரண்டு விவாதங்கள் 1975இல் நடைபெற்றன. முதலாவது விவாதத்தை ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமுக நிலையத்தினர் ஒழுங்கு செய்தனர். இதில் தமிழீழம் சாத்தியம் எனத் தமிழரசுக் கட்சி சார்பில் ம.க.ஈழவேந்தனும், சாத்தியமில்லை என மார்க்சிய லெனினிச கம்யூனிசக் கட்சியின் சார்பில் சி.கா.செந்திவேலும் வாதிட்டனர். விவாதத்தின் நிறைவில் நடுவர் தமிழீழம் சாத்தியமில்லை என தீர்ப்பளித்தார். இரண்டாவது விவாதம் சுன்னாகம் சந்தை மைதானத்தில் முன்னாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இதில் சாத்தியம் என உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கமும் சாத்தியமில்லை என நா.சண்முகதாசனுக்கும் வாதிட்டனர். இதில் “தமிழீழத்தைப் பெறுவதற்கான உங்களின் வேலைத்திட்டம் என்ன?” என்று சண்முகதாசன் கேட்ட கேள்விக்கு “அது இரகசியம்” என்று மட்டுமே தர்மலிங்கத்தால் பதிலளிக்க முடிந்தது. இவ்விவாதத்திலும் தமிழீழம் சாத்தியமில்லை என்ற கருத்தே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இவ்வகையான விவாதங்களைத் தமிழரசுக் கட்சி தடைசெய்தது, “தமிழீழம் என்பது முடிந்த முடிவு, அதுவிவாதங்களுக்கு உட்பட்டதல்ல” என அமிர்தலிங்கம் பிரகடனம் செய்தார். இவ்விவாதங்களில் தமிழீழம் சிறுபிள்ளைகளுக்கு நிலாக் காட்டுவது போன்றது, அதன் மூலம் வாக்குகள் பெறமுடியுமே தவிர அதற்கப்பால் வெற்றி பெற முடியாது என்பதை முற்போக்கு இடதுசாரிகள் ஆதாரங்களோடு நிறுவினர்.

இந்நிலையில், இளைஞர் அமைப்புக்களின் அரசுக்கெதிரான தீவிர நிலைப்பாடுகள் அடுத்தாண்டு வரவிருந்த பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோருவது என்ற திசையில் மெதுவாகப் பயணிக்கத் தொடங்கின. அவ்வாறு நிகழ்ந்தால் முதலுக்கே மோசமாகிவிடும் என்று தமிழரசுத் தலைவர்கள் அறிந்திருந்தனர். அதைத் தவிர்ப்பதற்காகத் தமிழீழக் கோரிக்கையை ஒரு பிரகடனமாக்கித் தேர்தலுக்கு வாக்குக் கேட்கும் பிரதான ஆயுதமாகப் பயன்படுத்த முடிவெடுத்தனர்.

1976 மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியின் சுண்ணாகத்தில் அமிர்தலிங்கத்தின் வீட்டுக்கு அருகாமையில் புதிதாக உருவான தமிழர் ஐக்கியக் கூட்டணியின் முதலாவது மாநாட்டில் வட்டுக்கோட்டைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டணியில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) என்பன இணைந்திருந்தன. இம்மாநாடு தமிழர் ஐக்கியக் கூட்டணி என்ற பெயரை, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என மாற்றியது. அதேபெயரில் கட்சிப் பதிவு பெற்று உதயசூரியன் சின்னத்தைத் தன் தேர்தல் சின்னமாகப் பெற்றது.

இவ்விடத்தில் ஒருமுக்கியமான நிகழ்வை நினைவூட்டல் தகும். ஒருபுறம் 1970களின் தொடக்கம் முதல் தனித் தமிழீழம் பற்றிப் பேசிக்கொண்டிருந்த தமிழரசுக் கட்சி தனது 1975ஆம் ஆண்டு மாநாட்டுக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை பிரதம விருந்தினராக அழைத்திருந்தது. பிரதமவிருந்தினராக அழைக்கப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன மல்லாகத்திலிருந்து காங்கேசன்துறை வரை ஊர்திப் பவனியில் செல்வநாயகத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார். இது தமிழரசுக் கட்சியினரின் இரட்டை நிலைப்பாட்டை எடுத்துக்காட்டியது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வாக்களிக்கும்படி கேட்டே தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 தேர்தலில் போட்டியிட்டது. தாம் தமிழீழத்தை வென்று தருவோம் என அமிர்தலிங்கம் மேடையெங்கும் பேசினார். தமிழர் கூட்டணிக்குப் பதினெட்டு ஆசனங்கள் கிடைத்தபோதும், அவர்கள் கோரிய தமிழீழத்திற்கான ஆணைக்குக் கிடைத்த வாக்கு விகிதம் ஐம்பத்திரண்டு சதவீதமாக மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் வாக்குகள் அவர்களுக்குத் தமிழீழத்தைப் பெற்றுத் தரவில்லை. ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பதினெட்டு ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்ததோடு, பாராளுமன்ற வரலாற்றில் முதல் முறையாகத் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகவரவும் வழி செய்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

தனி நாட்டுக்கு ஆணை கேட்டு எதிர்க்கட்சித் தலைவராகி அரசியல் செய்த அவலம் தமிழர் விடுதலைக் கூட்டணியினுடையது. எதிர்க்கட்சித் தலைவராகத் தனது முதலாவது பாராளுமன்ற உரையில் அமிர்தலிங்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த வெற்றியை ‘ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி’ என்றும் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்தனவை ‘மிகச் சிறந்த ஜனநாயகவாதி’ என்றும் தெரிவித்தார். தனி நாடு கேட்ட அரசியலின் அவலம் இவ்வாறு தான் தொடங்கியது.

## கடிதங்கள்

# உப வேந்தரிடம் கோரிக்கை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்ட பாடநெறிகளைப் பின்பற்றும் திருகோணமலை மாவட்ட மாணவர்களது சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட மாணவர்களை வசதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்படும் இவ்வகுப்புகள் அடிக்கடி நடத்தப்படுவதால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் இவ்வகுப்புகளில் கலந்துகொள்வதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஒரு நாள் தங்கி இருந்து வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக இதனால் பலர் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு நிகழ்நிலையில் (ஒன்லைன்) வகுப்புகள் நடத்த அல்லது திருகோணமலை மாவட்டத்தில் ஒரு கற்கை நிலையத்தை ஒழுங்கு படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– ஏ.எச்.ஹஸ்பர்



## வங்கி வட்டி வீதங்கள் குறைவால்

# மாற்று முதலீடுகளை நாடும் மக்கள்

இலங்கை மத்திய வங்கியினால் நாணயக் கொள்கைகள் மீளாய்வு செய்யப்படும் நிலையில், அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் போது, வைப்புகளுக்கான மற்றும் கடன் வழங்கலுக்கான வட்டி வீதங்களை தொடர்ந்தும் குறைப்பது பற்றி தீர்மானித்து அறிவித்திருந்தது.

இவ்வாரம் வெளியிடப்பட்ட தீர்மானத்தின் போதும், இந்த இரு வட்டி வீதங்களும் முறையே 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்துள்ளது. அதன் பிரகாரம் வைப்பு வீதம் 8.50 சதவீதமாக மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

இதனால் வங்கிகளில் நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்கள் கடந்த ஆண்டில் காணப்பட்ட இரட்டை இலக்கப் பெறுமதிகளிலிருந்து ஒற்றை இலக்கப் பெறுமதிகளுக்கு வீழ்ச்சி கண்டுள்ளன. இந்நிலையில், மக்கள் தம் கொண்டுள்ள நிதியை நிலையான வைப்புகளிலிருந்து மீளப் பெற்று மாற்று முதலீட்டுத் திட்டங்களில் வைப்புச் செய்வதற்கு தூண்டப்படுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை தரவுகளின் பிரகாரம் நாட்டில் பணவீக்கத்தை 5 சதவீதமாக பேணும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படுவதாகவும், தெரிவிக்கப்படுகின்ற போதிலும், வங்கிகளில் கடன்களுக்கான வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்படுகின்றன. குறிப்பாக தனிநபர் கடன்களை எடுத்துக் கொண்டால் 14-17 சதவீதம் வரையில் வங்கிகளில் வழங்கப்படுகின்றன.

சில வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் 35-40 சதவீதம் வரையிலும் கடன் வசதி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சந்தையில் ஒழுங்குபடுத்தல் சீராக கண்காணிக்கப்படாத ஒரு சூழலில், புதிதாக பல முதலீட்டுத் திட்டங்கள் முளைவிட்டுள்ளன. சாதாரணமாக, இலங்கையில் நிலவும் பொருளாதாரச் சூழலில் இவ்வாறான அனுமதி பெறாத, பதிவு செய்யப்படாத கவர்ச்சிகரமான அனுகூலங்களை வழங்கும் வாக்குறுதிகளுடன் மக்களை ஏமாற்றி அவர்களின் பணத்தை கொண்டு செல்லும் திட்டங்கள் தோன்றுவது வழமை. இவை தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

இரண்டு வருட காலப்பகுதியில் இலங்கை ரூபாயின் மதிப்பு சுமார் இரு மடங்கு வீழ்ச்சியை பதிவு செய்துள்ள நிலையில், பொது மக்களும் தாம் உழைத்த பணத்துக்கு உயர்ந்த பலனை பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றனர். மாறாக, வங்கிக் கட்டமைப்புகளில் அவர்கள் மேற்கொள்ளும் வைப்புகளுக்கு கிடைக்கும் வட்டியின் மீது வரி அறவிடப்படுவதாலும் அவர்களின் முதல் மீதான உழைப்பு வீழ்ச்சியடைகின்றது.

இந்நிலையில், மரச் செய்கைகளில் முதலீடு, ஆட்களை சேர்க்கும் பிரமிட் திட்டங்கள் போன்றவற்றில் மக்கள் தமது அறியாமையினால் நாட்டம் கொள்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில், மக்களின் வைப்புகளையும், முதலீடுகளையும் கவர்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட, அங்கிகாரம் பெற்ற நிறுவனங்கள் முறையான திட்டங்களை வழங்க வேண்டியது பொருத்தமானதாக அமைந்திருக்கும்.



# கொமர்ஷல் வங்கியின் மகளிர் தின நிகழ்வில் பெண் ஊழியர்கள்








2024ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில் இலங்கையின் கொமர்ஷல் வங்கியின் முயற்சிகளில் ஒன்றாக, நாடு முழுவதிலும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் பணி புரியும் பெண் ஊழியர்களை உள்ளடக்கிய ‘Counting HER in, and Investing in HER’ எனும் தலைப்பில் ஒரு சிறப்பு அறிவு பகிர்வு அமர்வினை நடத்தியது.

வங்கியின் மகளிர் வங்கிப் பிரிவு மற்றும் வங்கியின் ஊழியர்கள் அபிவிருத்தி நிலையம் (SDC) ஏற்பாடு செய்த இந்த நிகழ்வானது, பெண் ஊழியர்களிடையே உள்ளடங்கிய தன்மையை மேம்படுத்துதல், திறனை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைந்ததாக வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வானது, நேரடியாகவும் மற்றும் மெய்நிகர் ரீதியாகவும் என கலப்பின வடிவில், வங்கியின் கேட்போர் கூடத்தில் ஒரு அமர்வை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. மேலும் MS குழுக்கள் மூலம் மெய்நிகர் அணுகலானது, நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பங்கேற்பை உறுதி செய்தது.

இந்நிகழ்வில், உரையாற்றிய கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, பாலினம் பாராமல் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வலியுறுத்தியதுடன், அனைத்து ஊழியர்களும் வெற்றிபெறக்கூடிய ஆதரவான மற்றும் உள்ளடக்கிய சூழலை வளர்ப்பதற்கு வங்கியானது அர்ப்பணிப்பான சேவையை வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

பெண் ஊழியர்களின் திறனை அங்கீகரித்து முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், வங்கியின் வெற்றிக்கு அவர்களின் பங்களிப்பை அங்கீகரித்த மனதுங்க, வங்கி ஏற்கெனவே பெண் ஊழியர்களின் மேம்பாடு மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருவதாகவும், இந்த வேலைத்திட்டம் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்தை கொண்டதாகவும் கூறினார்.

AIA இன்சூரன்ஸ் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ நிறைவேற்றுப் பணிப்பாளர் சதுரி முனவீர, JAT ஹோல்டிங்ஸின் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் அனிகா வில்லியம்சன் மற்றும் Terapy Ayurvedic Tea நிறுவன ஸ்தாபகரும் பணிப்பாளருமான ருவினிகா ரணசிங்க உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் குழுவில் இடம்பெற்றமை மதிப்புமிக்க தருணத்தை வழங்கியது. இவர்கள் அனைவரும் பெருநிறுவனத்துறையில் பெண்கள் ஆளுமை மற்றும் அதிகாரத்துடன் திகழும் வகையில் தலைமைத்துவ பங்கினை வகித்து வருகின்றனர்.

நிகழ்வின் தலைப்புகள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளல், தாம் தெரிவு செய்த துறைகளில் தொழில்முறை நெறிமுறைகள் மற்றும் வலையமைப்பு மூலம் எவ்வாறு வெற்றி பெறுவது, தொழில் புரியும் பெண்களாகவும் தாய்மாராகவும் பணியிடங்களிலும் வீட்டிலும் எவ்வாறு சமநிலையை பேணுவது,

> **பெண்கள் ஆளுமை மற்றும் அதிகாரத்துடன் திகழும் வகையில் தலைமைத்துவ பங்கினை வகித்து வருகின்றனர்**

உறுதியான மற்றும் இலக்கு சார்ந்ததாக இருக்க வேண்டியதன் அவசியம், தொழில்முறை தகுதிகளின் முக்கியத்துவம், ஏனைய தொழில்களை புரியும் பெண்களுக்கு எவ்வாறு முன்மாதிரியாக திகழ வேண்டும் போன்றவற்றை உள்ளடக்கியதாகஅமைந்திருந்தது.

இந்நிகழ்வானது கேள்வி, பதில் அமர்வு மற்றும் சிற்றுண்டிகளுடன் நிறைவு பெற்றது. மேலும் இதில் பங்குபற்றியவர்களுக்கு இந்நிகழ்வானது தமக்கிடையே இணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் சமூக உணர்வை உருவாக்கவும், பெண் ஊழியர்களிடையே ஆதரவை ஏற்படுத்தவும் வாய்ப்பினை வழங்கியது.



## சிதையும் இளையோர் பண்பு

உளிபற்றி
செதுக்க வேண்டிய
சிற்பங்கள் இன்று
உருக்குலைந்து
போகும் அவலம்.
ஈழத்தின் தாகத்தை
தனதாக்கிட
அன்று இளமையை
இன்னுயிராக்கியவர்களின்
தலைமுறைகள் இன்று
யாக்கை இழந்து
தன்னிலை மறந்து
போகின்றநிலை.
போதைவஸ்தை ஆடையாக்கி,
வாள்வெட்டு கலாசாரத்தை
வாழ்வியலாக்கி
பிரக்ஞைஅற்ற
பிம்பங்களாய் இன்று
இளைஞனே!
உன் நிலைமறவாதே

- புவஸ்ரினா மெய்யழகன்






## நல்லபழம் வாங்கிப் போங்கோ..!

அம்மா வாங்கோ
ஐயா வாங்கோ
நம்ம ஊருப் பழங்களிருக்குது
நல்ல மலிவாய் தாறேன் வாங்கோ...
(அம்மாவாங்கோ...)
கறுத்தைக் கொழும்பான் அம்பலவி
கரும்பாய் இனிக்கும் தேன்தோடை
அன்னாசி பப்பாசி அருமையான வாழைப்பழம்
எல்லாப் பழமும் உண்டு ஓடிவாங்கோ...
ஓடிவாங்கோ
(அம்மாவாங்கோ...)
மருந்திலேதோய்ச்சுநான்
மாயமும் பண்ணவில்லை ஐயா
பச்சைக் காயைப் பழமாக்கும்
பழக்கமெல்லாம் இல்லை ஐயா
(அம்மாவாங்கோ...)
கிராமத்தில் இருந்துவாறேன்
கேடுசெய்துபிழைக்கமாட்டேன்
வெம்பியபழம் விக்கமாட்டேன்
நம்பிக்கையாய் வாங்கிப் போங்கோ...
(அம்மாவாங்கோ...)

-ஷெல்லிதாசன்





## விடைபெறும் கணங்கள்

ஒதுக்கப்பட்ட கதிரைகளில்
எப்போதும் கொழுவப்படும்
பிரபலமான முகங்கள்
மணப்பெண் கோலத்தில்
மேடைக்கு முன்னால்
சில நொடிகள்
சிரிப்பதற்காக காத்திருக்கும்
கொண்டைச் சேவல்
தலை துவட்ட தடுமாறும்
சிறு கணப்பொழுது
அகலும் சுழலும்
உயிரோடு இருந்தால்
ஒன்றையொன்று
எப்படியும்
அணைத்துக் கொள்ளும்
சிட்டிகை அளவு
சில நிமிடம்
அவனை அணைத்து
விடுங்கள்
வயதுக்கு வந்துவிட்டது
நேரம்
சந்தேகமே இல்லை
சடங்கு முடிந்ததும்
அணைக்கத்தான் போகிறது
அந்தரத்தில் இருக்கும்
மின் விசிறி

- இரவிகாந்தன்தி ருகோணமலை





## நிலையான பந்தம்

தூவல் மழையும் நீதான்
கடலலைகாற்றும் நீதான்
நான் சுவாசிக்க முன்பு
என்னை சுவாசித்தவளும் நீதான்
என்னை பெற்றெடுத்த தாயின்
அன்பின் வடிவானவளே
என்னை விட்டு நீ
ஒருநாளும் பிரியதே
பிரியமானவளே
தன் கனவின் மகிமையை
காலத்தின் நிஜத்தில்
உணரவேட்கை
கொண்டு
வேங்கைரசனையின்
உலகில் பற்பல
வேடிக்கைஅணுகி,
தற்சார்பு பாத்திரம்
அவள்(ன்) என
மனம் உவந்து ...
கைபிடித்தஉறவை
காலமும் தன் பாதத்தினுள்
ஏந்தி எழிலாடும் வாழ்வு
ஓவியகலை
நயனம் பெற
ஒருத்தலையின்றி
ஊடல் அலதியாககளிவிரங்க...
உண்மைஇருமனதின்
ஒன்றேஅனுபவம் பகிர
சபை கூடி
சான்றோர் முன்னே
அவனும் அவளும்
நாமென
ஒருவராகியபந்தம்
திருமணம்.

- வியாத்தன்







# “மனுக்குலம் மீதான தியாக அன்பால் உயிரைக் கையளிக்கின்றேன்”

**பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு தினங்களையொட்டி, இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

அ.மேரி சுனித்தா

இன்று எம்மில் பலரும் அன்பில் நம்பிக்கை இழந்துபோய் காணப்படுகின்றார்கள். காரணம், அவர்களது கடந்த கால அனுபவத்தில், அன்பு என்ற போர்வையில் அவர்கள் அனுபவித்த துன்பங்களேயாகும். தோலிலும் தோற்றத்திலும் எழும் கவர்ச்சி, உள்ளத்தை ஊடுருவாவிடின் அன்பு அர்த்தம் இழந்துவிடுகின்றது. திருவிவிலிய இறைவாக்கு முழுவதிலும் உள்ள போதனைகள், கருத்துகள் என்பவற்றை இரத்தினச் சுருக்கமாக, ‘ஒருவர் ஒருவரிடம் அன்புகூர வேண்டும்’ என்று எளிமைப்படுத்தி, இயேசு கிறிஸ்து அன்புக்கு அர்த்தம் போதிக்கின்றார்.

அன்பில் பலநிலைகள் உண்டு, ஏழையைக் கண்டு இரங்குவது, இரக்கம், வெற்றி பெற்றவரைத் தட்டிக்கொடுப்பது, ஊக்கம், தவறு இழைத்தவர் மறுபடியும் தவறு செய்யாதவாறு தட்டிக்கேட்பது அதிகாரம். இவை போன்று அன்பின் வடிவங்கள் ஏராளம். அனைத்துக்கும் மேலானதும் தெய்வீகமானதும் தியாகம் என்ற அன்பின் வடிவமாகும்.

தன்னையே கொடுக்கும் அன்புதான் தியாகம், அதுவே, தெய்வீக அன்பு. இயேசு கிறிஸ்துவின் அவதாரத்துக்கும் சிலுவை மரணத்துக்குமான விளக்கமும் இந்தத் தியாகம் என்ற அன்பின் தெய்வீக நிலையாகும். ‘அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’ என்ற வள்ளுவ வாக்கின் விளக்கமும் இதுவேதான்.


சுயநலம் மலிந்த எம் உள்ளங்களில் காணி, காசு என்று அடுத்தவரைச் சுரண்டிச் சம்பாதிக்கும் ஆசை கொண்டிருக்கின்றது. இத்தகைய உள்ளங்களுக்கு ‘தெய்வீக அன்பு’ வெறும் கற்பனையாகத் தோன்றும். ஆனாலும், நிம்மதியாக வாழ்வதற்குத் தெய்வீக அன்பு நிலையைத் தவிர்ந்த வேறு வழியே மனிதனுக்கு இல்லை என்பதுவே, மெய்ஞானத்தாலும் விஞ்ஞானத்தாலும் உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகும். அறிவால், ஆற்றலால், பொருளால், பெயரால் மனிதன் உயர்நிலையை அடைய முயலலாம். ஆனால், அன்பு செலுத்த மனமில்லாத அவனால் மனிதனாகவே வாழ முடியாது.

”நீங்கள் அல்ல, நான்தான் உங்களைத் தேர்ந்தெடுத்தேன்” என்று கூறும் இறைவன், தமது அன்பை எமது உள்ளங்களில் கொடையாகப் பொழிந்து, எம்மைத் தன்னுள் உள்ளீர்த்துக் கொள்கின்றார். ஆனால், நாமோ எம் இதயங்களைக் கடினப்படுத்தி, பிரதி அன்பு காட்ட மறுக்கின்றோம், மறுதலிக்கின்றோம்.

“பாவத்தின் காரணமாக இறந்தவர்களாக இருந்தோம்” (எபே. 2:5). கிறிஸ்து இல்லாத நிலையில் மனிதர்களைப் புனித பவுல் இவ்வாறுதான் வர்ணிக்கின்றார். இதனால்தான் இறைமகன் மனித இயல்பை ஏற்று, பாவத்தினதும் மரணத்தினதும் அடிமைத்தனத்தில் இருந்து அதை விடுவிக்க விரும்பினார். தன்னலத்தில், பொறாமையில், பணப்பித்தில், வஞ்சக எண்ணங்களில் இன்னும் எத்தனையோ அழிவுகளில் இருந்து மனிதன் உயிர்த்துவிட வேண்டும் என்றும் விரும்பினார்.

மற்றவர்களின் ஆற்றல்களை வளராமல் தடைசெய்யும் போதும் அடுத்தவரின் மனதை நோகடிக்கும் போதும் எத்தனையோ சிலுவைகள் எமது உடலைச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கின்றன. தனது இரத்தத்தையும் சிலுவையையும் இணைத்ததன் மூலம் இயேசு, எமக்கு மீட்பின் வழியைக் காட்டினார்.

அன்றாட வாழ்வில் நாம் பலவிதமான மோசடிகள், பகைமைகள், பிறருக்கு கேடு விளைவித்தல், பொய்மைகள் ஆகியவற்றைக் காண்கின்றோம். இவற்றின் பிறப்பிடமும் இவற்றால் பாதிக்கப்படுபவனும் மனிதனே. மனிதகுலம் பாவத்தால் வலுப்பட்டுள்ளது. அதன் அவல நிலையை அப்போஸ்தலர் அன்று “நேர்மையாளரே இல்லை, ஒருவர் கூட இல்லை” (உரோ. 3:10) என மக்களுக்கு விடுத்த எச்சரிக்கையை நினைவூட்டுகின்றது. பாவத்தின் இருளில் மனிதன் தன்னைத் தானே விடுவித்துக்கொள்ள இயலாதவனாக



இருப்பதால், கிறிஸ்துவின் மீட்புப் பணி, அங்கு முழு மகிமையுடன் தோன்றுகின்றது.

நெருப்புக்குள் இருந்து கொண்டு நீரைத் தேடினால் மனிதனால் நீரின் குளிர்ச்சியை அனுபவிக்க முடியாது. உலகப் போக்குகளான கொலை, கொள்ளை, வஞ்சனை, சூது, எரிச்சல், பொறாமை, சிற்றின்பப் போக்குகள் இவற்றுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டு, உண்மையான அன்பைத் தேட முடியாது. இருளுக்காக உழைத்துக்கொண்டு ஒளியை எதிர்பார்ப்பது அறிவீனம் இல்லையா?

இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகுமாறு இயேசுவை இறைவன் பலிப்பொருளாக நியமித்தார். அவரிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவே, அவ்வாறு செய்தார். இவ்விதமாகத் தமது நீதியைக் காட்டினார். (உரோ. 3:25) உலகின் பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்ட செம்மறிப் புருவையே கிறிஸ்து. சாவை அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு. (பிலி. 2:8) அவர் மனித வாழ்வில் பங்குகொண்டார்.

பெரிய வெள்ளிக்கிழமை

இயேசுவின் தியாக அன்பின் பயணம், யோவான் நற்செய்தியின் படி, சிலுவை சுமக்கின்ற நிகழ்வோடு ஆரம்பமாகின்றது. ஏனைய மூன்று நற்செய்திகள் குறிப்பாக, மத்தேயு, லூக்காஸ் நற்செய்திகள், இயேசுவின் உயிர்துறப்பு நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடுகையில், “இயேசு தன் ஆவியைத் துறந்தார்” என்று வர்ணிக்கின்றன. ஆனால், யோவான் மட்டும், “இயேசு தன் ஆவியை ஒப்படைத்தார்” எனச் சொல்லும் விதம் கருத்தாளம் மிக்கதாகும். அதாவது, “யாருமே என் உயிரைப் பறிக்க முடியாது. மனுகுலத்தின் மீதான தியாக அன்பின் காரணமாக, நானாகவே என் உயிரைக் கையளிக்கின்றேன்” என்ற கருத்து இங்கு இழையோடுகின்றது.

ஈட்டியால் உண்டான காயத்தில் இருந்து, இரத்தமும் நீரும் புறப்பட்ட நிகழ்வு, ஞானஸ்நானத்தையும் ஏனைய அருட்சாதனங்களையும் குறித்து நிற்கின்றது. இயேசு தன் போதனைகளிலேயே உயிருள்ள நீர் தன்னிடமிருந்து ஊற்றெடுத்து, பாயும் என்று தீர்க்கதரிசனமும் நிறைவேறுவதைக் காணலாம். இயேசுவின் அடக்க நிகழ்வில், பரிசேயரான நிக்கோதேமுவின் ஒத்தாசை கிடைக்கப்பெறுகின்றது. “நான் சிலுவையில் உயர்த்தப்பட்டதும் எல்லோரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்” என்ற இயேசுவின் வார்த்தைகளை மெய்ப்பிப்பதாக அமைகின்றது.

இயேசுவின் முன்னால் சாத்தானின் சோதனைகள் வெற்றி பெறவில்லை. அவர், தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் சோதிக்கப்பட்டார். “ஓசான்னா” என்று இயேசுவை வாழ்த்திய அதே மக்கள், “ஒழிக” என்று கோஷமிட்டு சாத்தான்கள் பக்கம் திரும்பினார்கள். ஆனால், இயேசுவோ, இறை சித்தத்தை நிறைவேற்றச் சிலுவை மரணத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, அநீதியாகத் தீர்ப்பிடப்பட்ட சிலுவையில் தொங்கினார்.

இயேசு, மரணமடையப் போவதைக் கண்ட சாத்தான், வெற்றி தனதே என்று இறுமாப்பு அடைகின்றான். இயேசு சிலுவையில் தொங்கி இறப்பதைக் கண்ட அதிகாரிகளும் வெற்றியைக் கொண்டாடுகின்றார்கள். “இதோ எனது உயிரை, உமது கரங்களில் ஒப்படைக்கின்றேன்” என்று கூறி, உயிர்விட்ட இயேசுவை, தந்தையாம் இறைவன் தன் அன்பான மைந்தனாக ஏற்று, அரியணையில் அமர செய்கின்றார்.

“இவ்வுலகில் தலைவன் புறம்பே, தனியே தள்ளப்படுவான். இதோ வந்து விட்டது கடவுள் தரும் மீட்பு, இதோ அவரது வல்லமையும் அரசும் வெளியாயிற்று” என்றும் சாத்தானின் வீழ்ச்சி பற்றியும் இயேசுவின் ஆட்சி பற்றியும் கூறும் வேதவசனம், இயேசுவின் உயிர்ப்பில் நிறைவெய்துகின்றது. சாத்தானின் கொட்டம் அடங்குகின்றது.

நாமும், இயேசுவைப் போல் சாத்தானால் சோதிக்கப்படும்போது, சாத்தானை எதிர்த்து நிற்பதற்கு, இறை வார்த்தையையும் இறையருளையும் பயன்படுத்துவோம். வெற்றியடைவோம். கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் இயேசுவைப் பின் செல்வோம்.

சிலுவையில் நிறைவேற்றப்பட்ட மீட்புச் செயல், பிரபஞ்சத்தைப் புதுப்பித்து, இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மனிதர் ஒவ்வொருவருக்கும் இடையில் அன்பை விதைத்து, ஒப்புரவைக் கொண்டுவருகின்றது.

## உயிர்த்த ஞாயிறு

உயிர்த்த ஞாயிறு இரவு, ஆண்டவருடைய வருகைக்காக விழித்திருந்து காத்திருக்கும் ஷபாஸ்கா இரவுடன் ஆரம்பமாகின்றது. ஆண்டவர் வருகையை எதிர்கொள்ள எரியும் விளக்குடன் விசுவாசிகள் காத்திருப்பார்கள்.

இங்கு ஒளி இறைவனைக் குறிக்கும் அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஏனெனில் ஒளியின் வடிவில்தான் முட்புதரில் மோசேய்க்கு இறைவன் காட்சிகொடுத்தார். ஒளியின் வடிவில்தான் இயேசுவின் பிறப்பும் அறிவிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று புனிதப்படுத்திய புதுத் தீ பாஸ்கா மெழுகுதிரியில் ஏற்றப்படும். இங்கு ஒளியின் அடையாளம் இயேசுவின் உயிர்ப்பை உறுதிப்படுத்துகின்றது. ஏனென்றால், “உலகின் ஒளி நானே” என்று இயேசு மொழிந்தார்.

பாஸ்கா மெழுகுதிரியில் காணப்படும் சிலுவை அடையாளம், மானிடம் முழுவதும் சிலுவையால் மீட்கப்பட்டதையும் ‘அல்பா’, ‘ஒமேக்கா’ என்ற கிரேக்க எழுத்துகள், இயேசு என்றென்றும் நிலையானவர் என்பதையும் எழுதப்பட்டிருக்கும் ஆண்டு இயேசு என்றென்றும் காலங்களையும் யுகங்களையும் கடந்தவர், மாட்சியும் ஆட்சியும் அவருக்கே உரியன என்பதையும் ஐந்து சாம்பிராணி மணிகளும் இயேசுவின் ஐந்து திருக் காயங்களையும் ஞாபகப்படுத்துகின்றன.



Left to right Satedi - Ravindu Udawaththa, Sahan Withanage (captain), Miss DMD Priyadarshani (MIC), Mr BRN Saranga (Actg Director), Dr. IR Palihakkara (SAB chairman), Senior Professor Sujeewan Amarasena (Vice-chancellor), Senior Professor Saman Chandana Ediriweera (Deputy Vice-chancellor), Mr. Arjuna Manage (Editor & Translator), Mr. Ashan Munasinghe (Coach), Sachintha Senanayaka (vice captain), Ruchika Jayarathne

Left to right Standing - Imantha shehan, Seniru jayathilaka, Ahkam Shakeel, Dilshan Maduranga, Malith Kaushalya, RomethSathnindua, Ravindu Dahanayaka, Ravindu Abeysundara, Janith Kavishka, Kavishka Lakshan, Dilas Rameshkumar, Daham Dulara, Pathum Sanjaya, Harith madhusha, Nipun Nimsara, Prabuddha Kaushalya, Chethika Rajapaksha, Kavidu Madusanka

### இலங்கை கிரிக்கெட் வரலாற்றில்

# உருகுணை- யாழ். சமர் ஆரம்பம்

**இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் முக்கியமானதொரு மைல்கல்லாக உருகுணை பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான சகோதரத்துவ சமர் நிகழ்வானது வரலாற்றைப் படைக்கவுள்ளது. நாட்டின் இவ்விரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான முதலாவது கிரிக்கெட் போட்டியானது 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 30ஆம் வரை உருகுணை பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அதேவேளையில், குறித்த நிகழ்வானது விளையாட்டுத் துறை உட்பட இனங்களுக்கிடையிலான தோழமையிலும் புதிய சகாப்தத்தைப் படைக்க உறுதுணையாக அமையவுள்ளது.**

சகோதரத்துவச் சமர் என்பது வெறுமனே கிரிக்கெட் போட்டிமட்டுமல்ல, மாறாக இலங்கையில் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான ஒற்றுமை, நட்புறவு மற்றும் நல்லிணக்கத்தின் சின்னமாகும். உருகுணை பல்கலைக்கழகத்தின் சமூகநல்லிணக்கமையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்து ஏற்பாடு செய்துள்ள குறித்த முயற்சியானது, சமூக நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்கின்ற அதேவேளையில், பல்கலைக்கழக சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

> **எல்லைகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் விளையாட்டுச் சக்தியின் சான்றாகும். மேலும், குறித்த வரலாற்று நிகழ்வானது ஒற்றுமை, நட்புறவு உட்பட நல்லிணக்கத்தின் பெறுமதிகளையும் பிரதிபலிக்கின்றது**

> **இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் நினைவுகூர வேண்டிய மிக முக்கிய தருணமொன்றாக வரலாற்றில் தடம் பதிப்பதற்கு விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 30ஆம் திகதிவரை எங்களுடன் கரம் கோருங்கள்**

கிரிக்கெட் விளையாட்டானது இலங்கை மக்களின் இதயங்களில் முக்கியமானதொரு இடத்தினை வகிப்பதன் காரணமாக இந்நிகழ்வானது விளையாட்டுத்துறையின் விருத்தியில் வரலாற்று ரீதியான மைல்கல்லைப் பிரதிபலிப்பதாக அமையவுள்ளது. பல்வேறு பிரதேசங்களையும் பின்னணிகளையும் பிரதிபலிக்கின்ற மாணவர்களையும் கல்வித்துறையினரையும் ஒன்றிணைக்கின்ற குறித்த முயற்சியானது நல்லிணக்கம் மிக்க ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குக் கலங்கரைவிளக்கமாக அமையவுள்ளது.

சகோதரத்துவச் சமர் நிகழ்விற்குக் கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் லைகாஞானம் அறக்கட்டளை ஆகியவற்றிலிருந்து அதிகளவான அனுசரணை கிடைத்துள்ளமையை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கின்ற அதேவேளையில், அவர்களது ஆதரவு இந்நிகழ்வை நனவாக்குவதற்கு முக்கிய பங்காற்றுகிறது. மேலும், விளையாட்டின் மூலம் ஒற்றுமையையும் நட்பையும் மேம்படுத்துவதற்கான அவர்களது அர்ப்பணிப்புக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளையாட்டு மீதான எமது அன்பினூடாக அனைவருக்கும் பிரகாசமிக்கதும் பெருமதிமிக்கதுமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒரே தேசத்தவர்களாக ஒன்றுபடுவோம்.

சகோதரத்துவச் சமர் என்பது வெறுமனே கிரிக்கெட் போட்டி மாத்திரமன்று, மாறாக எல்லைகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் விளையாட்டுச் சக்தியின் சான்றாகும். மேலும், குறித்த வரலாற்று நிகழ்வானது ஒற்றுமை, நட்புறவு உட்பட நல்லிணக்கத்தின் பெறுமதிகளையும் பிரதிபலிக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் நினைவுகூர வேண்டிய மிக முக்கிய தருணமொன்றாக வரலாற்றில் தடம் பதிப்பதற்கு விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 30ஆம் திகதிவரை எங்களுடன் கரம் கோருங்கள்.



Seatedi - S. Lavanyan, D. Sherophan, A. Kajeeban (Capt), G.D. Mathiyalagan (IPE), K. Ganeshanathan (DPE), P.A.I. Roshanthan, B.D.I. Balasuriya, S. Bathushanan
Standing - M.G.K.S.B. Vijerathna, P.G.D.D.M. Bandara, T. James Diloshan, I.S. Shamil, D.W.M. Aravintha, S. Srimenakan, S. Dinojan, Y.G.C.S. Jeyarath
Absort - T. Thayustan, R.L.C.M.M. Ranathunga, I.D.A.P. Iddamalgoda, A. Sukeethan.




### மலையாளத் திரையுலகில்

# மைல்கல்



**யோகேஸ்வரன் ஜோவர்ணன்**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

“மனிதன் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் அல்ல”... என்ற வசனம் கலந்த, கமலஹாசனின் குணா திரைப்படப் பாடல், இன்று சமூக வலைத்தளங்கள் அனைத்திலும் மிகப் பிரபல்யமாக (Trending) பேசப்படுவது மட்டுமின்றி, எமது காதுகளில் ஒலிப்பதோடு வாய்களிலும் நிமிடத்திற்கு நிமிடம் முனுமுனுக்குமளவிற்கு மாறியுள்ளது. இவ்வாறு திடீரென இந்தப் பாடலும் கேரளாவிலுள்ள குணா குகையும் அதிகம் பேசுபொருளாகக் காணப்படுவதற்கு என்னதான் காரணமாக இருக்கும்.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வெளியான மலையாள மொழி திரைப்படம் தான் மஞ்சும்மேல் பாய்ஸ் (Manjummel boys) ஆகும். இப்படத்தை இயக்குநர் சிதம்பரம் எஸ். பொதுவாள் (Chidambaram S.Poduval) தனது இரண்டாவது திரைப்படமாக எழுதி, மிகச் சிறப்பாக இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்களாக சௌபின் சாகிர், சிறீநாத் பாசி, பாலு வர்க்கீசு, கணபதி, எஸ.பொதுவாள், லால் ஜூனியர், தீபக் பறம்போல், அபிராம் ராதாகிருஷ்ணன், அருண் குரியன், காலித் ரகுமான், சந்து சலீம்குமார், விஷ்ணு ரெகு மற்றும் பல புதுமுக நடிகர்களின் நடிப்பின் மூலமும் திரையரங்குகளில் மாபெரும் வெற்றி நடை போடுகின்றது.

இப்படம் ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் கதையைச் சுருக்கமாக நோக்கின் மஞ்சும்மேல் என்பது கேரளாவிலுள்ள ஒரு கிராமமாகும். கிராமத்தைச் சேர்ந்த 10 நண்பர்கள் சுற்றுலா செல்வதற்கென திட்டம் தீட்டுகின்றனர், ஆரம்பத்தில் “கோவா” எனும் இடத்திற்குச் செல்ல முயற்சிக்கின்றனர் எனினும் கோவா செல்லும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. பின்னர் “கொடைக்கானல்” எனும் இடத்தை நோக்கிச் செல்கின்றனர் அங்குள்ள சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கையில், ஒரு கட்டத்தில், தாங்கள் இன்னுமே குணாக் குகை பார்க்கவில்லை என எண்ணுகின்றனர். ஏனெனில், கொடைக்கானலில் குணாக் குகை தான் மிகப் பிரபல்யமான இடமாகும். இங்குதான் 1991ஆம் ஆண்டு வெளிவந்த கமலஹாசனின் குணா படத்தின் “கண்மணி அன்போடு காதலன் நான் எழுதும் கடிதமே...” என்ற பாடலில் இடம்பெறுகின்ற காட்சிகள் படப்பிடிப்பு செய்யப்பட்டன. இதனால் இந்த குணாக் குகையைப் பார்ப்பதற்காக நண்பர் குழாம் இங்கு வருகின்றனர் குணாக் குகையின் மேற்பகுதியில் நின்று பார்க்கும்போது குகையின் உட்பகுதி தெரியவில்லை என, நண்பர்கள் குகைக்குள்ளேயே இறங்கிச் செல்ல எத்தனிக்கின்றனர். குகைக்குள் சென்ற நண்பர்கள் ஒரு ஆபத்து நிலையை எதிர்கொள்ளும் தன்மை ஏற்படுகின்றது. அப்படி என்ன ஆபத்து நடக்கிறது?, அவர்கள் அனைவரும் உயிருடன் திரும்புகின்றனரா? என்பதே இந்த மஞ்சும்மேல் பாய்ஸ் திரைப்படத்தின் மிகுதி கதையாகவுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தைக் கவனித்தால் மலையாள திரையுலகம் மிகுந்த பேசுபொருளாகவுள்ளது என கூற வேண்டும். ஏனெனில், மிகச்சிறந்த, சுவாரஸ்யமான திரைப்படங்களை வழங்கியுள்ளனர். மீண்டும் மீண்டும் வெற்றிப் படங்கள் (back to back Hits films ) பிரேமலு, பிரேமயுகம்

மற்றும் மஞ்சும்மேல் பாய்ஸ் என மூன்று திரைப்படங்களும் மூன்று வித்தியாசமான (Genres) வகைகளில் எடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மஞ்சும்மேல் பாய்ஸ் மிகச் சிறந்த படமாக இரசிகர் மத்தியில் பேசப்படுவதுடன் திரையரங்குகளில் வெற்றி நடை போடுகின்றது.

இப்படம் Technical ரீதியாகவும் சிறந்து விளங்குகின்றது. அந்த வகையில், சுசின் சியாம் (Sushin Shyam) இப்படத்துக்கு இசையமைத்துள்ளார். பாடல்கள் அனைத்தும் ஹிட்ஸ் (hits) ஆனதோடு, மீண்டும் மீண்டும் கேட்க வைக்கின்றன. பாடல்களைத் தாண்டி, பின்னணி இசை (Background music) நுணுக்கமாகவும் பொருத்தமாகவும் கொடுத்துள்ளார். இதற்குக் காரணம் Location மற்றும் Situation என்பவற்றை இயக்குநரின் மன நிலையிலிருந்து அதற்கேற்ப இசையமைப்பாளர் வழங்கியுள்ளார். ஒரு சீனில் கல் ஒன்று குளிக்குள் விழும் அந்த சத்தத்தை Sound effect மூலம் நுணுக்கமாகக் கொடுத்து பொது செய்தியைக் கடத்தியதோடு, ரசிகர்களிடம் திகிலூட்டும் உணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கியுள்ளார்.

படத்தின் Screenplay பொறுத்தவரையில் ஒரு தரமான முன்பகுதியும் (1st half), திரைப்படத்தைப் பார்க்கும் இரசிகர்களை உறையவைக்குமளவிற்கு இடைவேளைக்குப் பின் இரண்டாவது பகுதியும் (2nd half) அமைந்துள்ளன. அதாவது முன்பகுதியில் பாத்திரங்களின் அறிமுகம் (character into) சுற்றுலா செல்ல தயாராவது, கொடைக்கானலுக்குச் சுற்றுலா செல்வது எனவும் இரண்டாம் பகுதி கமலஹாசனின் குணா படப்பாடலான “கண்மணி அன்போடு காதலன்...” என்ற வசனமும் பாடலும் Climax இல் கையாளப்பட்ட விதம் இதுவரை யாராலும் நினைத்துப் பார்க்காத வண்ணமாகவுள்ளது. இந்த Scene இல் திரையரங்கில் இரசிகர்கள் இருக்கையை விட்டு எழுந்து நிற்கும் நிலை உருவாக்கும் என்பதில் எவ்வித மறுப்புமில்லை.

படத்தில் நடித்துள்ள நடிகர்கள் அனைவரும் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை படம் பார்க்கும்போதே புரிந்து கொள்ள முடியும். இப்படம் மலையாள மொழியிலும் , Sub title ஆங்கில மொழியிலுள்ளது படத்தின் பெரும்பாலான கதை தமிழ்நாட்டின் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டதால் பல தமிழ் உரையாடல்கள் சொற்கள் இடம்பெறுகின்றமையால் தமிழ் இரசிகர்கள் இலகுவில் விங்ககொள்ள முடியும்

மொத்தத்தில் மஞ்சும்மேல் பாய்ஸ் திரைப்படமானது வெற்றி நடைபோடுகின்ற ஒரு Adventure thriller திரைப்படமாகவும் 200 கோடி வசூலைக் குவித்த முதல் மலையாள படம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது.



புதுடெல்லி

# “பணம் இல்லாததால் போட்டியிடவில்லை”

மக்களவைத் தேர்தலில் போட்டியிட தேவையான நிதி தன்னிடம் இல்லை என்பதால் போட்டியிடும் வாய்ப்பை மறுத்ததாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, “வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் நான் ஆந்திரா அல்லது தமிழ்நாட்டில் போட்டியிட பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ஜே.பி. நட்டா வாய்ப்பை வழங்கினார்.



ஆனால் ஒரு வாரம், 10 நாள்கள் யோசித்த பிறகு, நான் போட்டியிடவில்லை என சொல்ல திரும்பிச் சென்றேன். போட்டியிட என்னிடம் பணம் இல்லை.

ஆந்திரப் பிரதேசமாக இருந்தாலும் சரி, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, எனக்கு ஒரு சிக்கலும் உள்ளது. இது அவர்கள் பயன்படுத்தும் பல்வேறு வெற்றித்திறன் அளவுகோல்களின் கேள்வியாகவும் இருக்கும். ‘நீங்கள் இந்த சமூகத்தைச் சேர்ந்தவரா அல்லது அந்த மதத்தைச் சேர்ந்தவரா? நீங்கள் இதில் இருந்து வந்தவர்களா?’ என்றெல்லாம் கேட்டார்கள். நான், இல்லை என்று சொன்னேன்.

என்னால் அதைச் செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. எனது வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நான் மிகவும் நன்றியுடன் இருக்கிறேன். எனவே நான் போட்டியிடவில்லை.

தொடர்ந்து, ‘நாட்டின் நிதியமைச்சரிடம் ஏன் தேர்தலில் போட்டியிட போதுமான நிதி இல்லை’ என கேட்டதற்கு, “இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதி தனக்கு சொந்தமானது அல்ல” என அவர் தெரிவித்துள்ளார்.



## வீடியோக்கள் நீக்கம்: இந்தியா முதலிடம்

சமூக வழிகாட்டுதல்களுக்கு எதிரான உள்ளடக்கங்களை கொண்ட வீடியோக்களை யூடியூப் நிறுவனம் நீக்கி வருகிறது. குறிப்பாக தீங்கு விளைவிக்கும் அல்லது ஆபத்தான உள்ளடக்கம், குழந்தை பாதுகாப்பு விதிமீறல், வன்முறை அல்லது கிராபிக் உள்ளடக்கம், நிர்வாணம் மற்றும் பாலியல் உள்ளடக்கம், தவறான தகவல் உள்ளிட்டவை தொடர்பான வீடியோக்கள் நீக்கப்பட்டு வருகின்றன.


இவ்வாறு கடந்த ஆண்டு அக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான 3 மாதங்களில் 90 இலட்சத்துக்கு வீடியோக்களை யூடியூப் நிறுவனம் நீக்கி இருக்கிறது.

இதில், உலக அளவில் இந்தியா முதலிடம் பிடித்து இருக்கிறது. அதாவது இந்த 3 மாதங்களில் 22,54,902 இந்திய வீடியோக்கள் நீக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக 12,43,871 வீடியோக்களை நீக்கிய சிங்கப்பூர் 2ஆவது இடத்தில் உள்ளது.

அடுத்ததாக அமெரிக்கா (7.88 இலட்சம்), இந்தோனேசியா (7.70 இலட்சம்), ரஷியா (5.16 இலட்சம்) போன்ற நாடுகள் உள்ளன.

சென்னை

## இந்த தொகுதியில் அதிக வேட்பாளர்கள்



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி 40 லோக்சபா தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக எதிர்வரும் ஏப்ரல் 19ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது.

குறித்த லோக்சபா தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் புதன்கிழமை (27) நிறைவடைந்தது.

மொத்தமாக, 1403 பேர் எம்.பி. தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்துள்ளனர். கரூர் பாராளுமன்ற தொகுதியில் தான் அதிகமானோர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 39 பாராளுமன்றத் தொகுதிகளில் மொத்தம் 1,403 பேர், 1,749 வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அதிகபட்சமாக கரூரில் 62 வேட்பாளர்கள் 70க்கும் மேற்பட்ட வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அதேபோல் இடைத்தேர்தல் நடைபெறும் விளவங்கோடு தொகுதியில் 18 பேர் 22 வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இங்கிலாந்து

## கட்டிப்பிடித்து சம்பாதிப்பு



இங்கிலாந்தின் மான்செஸ்டரில் வசிக்கும் அனிகோ ரோஸ் என்பவர், நம்மில் பெரும்பாலோர் நினைக்காத ஒன்றைச் செய்து, அதன் மூலம் பெரும் செல்வத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறார்.


அனிகோ ரோஸ் ஒரு புரொஃபஷனல் ‘ஹக்கர்’ (professional hugger) ஆவார். இவர் பணம் சம்பாதிக்கும் நோக்கில் மக்களை கட்டிப்பிடிக்கும் பணியை செய்து வருகிறார்.

குறித்த பெண்ணின் தொழில் ‘அரவணைப்பு’ என்று அழைக்கப்படுகிறது. 42 வயதான இவர் கடந்த மூன்று ஆண்டுகளாக இதைச் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அரவணைப்பு ஒரு நபருக்கு மகிழ்ச்சியையும் மன அழுத்தம் மற்றும் தனிமையில் இருந்து விடுதலையையும் தருகிறது என்றும் ஒரு நபர் சோகமாகவோ அல்லது மன அழுத்தமாகவோ இருந்தால், அவர்களின் மன ஆரோக்கியம் மனித தொடுதலின் மூலம் மேம்படத் தொடங்குகிறது எனவும் அவர் கூறுகிறார்.

மேலும், ஒரு மணி நேரத்திற்கு 70 பவுண்டுகள் (இலங்கை ரூபாவில் சுமார் 26,555) வசூலித்து வருகிறார்.

தாய்லாந்து

## ஒரே பாலின திருமணங்களுக்கு அங்கீகாரம்



தாய்லாந்தில் ஒரே பாலின திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்க திருமண சமத்துவ மசோதா, அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எந்த பாலினத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், திருமணம் செய்தால் அவர்களுக்கு சம உரிமைகள் கிடைப்பதை இந்த மசோதா சட்டப்பூர்வமாக்குகிறது.

இதற்கமைய, ஏற்கெனவே உள்ள சட்டத்தில் திருமண பந்தம் தொடர்பாக ஷரத்துகளில் “ஆண்கள் மற்றும் பெண்கள்” மற்றும் “கணவன் மற்றும் மனைவி” என்ற வார்த்தைகளை “தனிநபர்கள்” மற்றும் “வாழ்க்கை துணைவர்கள்” என்று மாற்றப்பட்டுள்ளது. இந்த மசோதா மீதான விவாதத்திற்குப் பிறகு வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, 415 உறுப்பினர்களில் 400 உறுப்பினர்கள் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் பெருவாரியான உறுப்பினர்கள் ஆதரவுடன் மசோதா நிறைவேறியது.

எல்.ஜி.பி.டி.க்யூ+ தம்பதிகளுக்கு முழு சட்ட உரிமைகள் மட்டுமல்லாமல் நிதி மற்றும் மருத்துவ உரிமைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகளை இந்த சட்டம் வழங்குகிறது.

பாராளுமன்ற கீழ்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த மசோதா, இனி செனட் சபைக்கு அனுப்பப்படும். பெரும்பாலும் கீழ் சபையில் நிறைவேற்றப்படும் சட்டத் திருத்தத்தை செனட் சபை ஏற்றுக்கொள்ளும் என்பதால், இந்த சட்ட மசோதாவும் செனட் சபையில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் மன்னரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். மன்னர் ஒப்புதல் அளித்தவுடன் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால், தென்கிழக்கு ஆசியாவில் இத்தகைய சட்டத்தை நிறைவேற்றிய முதல் நாடாக தாய்லாந்து மாறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல்: ஓட்ட மழையில்

# மும்பையை வென்ற ஹைதராபாத்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் உடனான போட்டியில் சண்ரைசர்ஸ் ஹைதராபாத் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பையின் அணித்தலைவர் ஹர்திக் பாண்டியா தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத், ட்ரெவிஸ் ஹெட்டின் 62 (24), அபிஷேக் ஷர்மாவின் 63 (23), ஹென்றிச் கிளாசெனின் ஆட்டமிழக்காத 80 (34), ஏய்டன் மார்க்ரமின் ஆட்டமிழக்காத 42 (28) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 277 ஓட்டங்களைக் குவித்து ஐ.பி.எல் வரலாற்றில் இனிங்ஸொன்றில் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்தது. முன்னதாக 2013ஆம் ஆண்டு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு 263 ஓட்டங்களைப் பெற்றதே இதற்கு முன்னைய சாதனையாகக் காணப்பட்டது.



பதிலுக்கு 278 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, இஷன் கிஷனின் 34 (13), திலக் வர்மாவின் 64 (34), றோஹித் ஷர்மாவின் 26 (12), நாமன் திர்ரின் 30 (14), டிம் டேவிட்டின் ஆட்டமிழக்காத 42 (22), தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய றொமாரியோ ஷெப்பர்ட்டின் ஆட்டமிழக்காத 15 (06) ஓட்டங்களோடு வெற்றியிலக்கை துரத்தியபோதும் இறுதியில் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களையே பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஐ.பி.எல்லில் தோல்வியடைந்த போட்டியொன்றில் பெறப்பட்ட அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கையை மும்பை பதிவு செய்தது.

தவிர இருபதுக்கு-20 போட்டியொன்றில் இப்போட்டியில் மொத்தமாக பெறபட்ட 523 ஓட்டங்களோ, 38 ஆறு ஓட்டங்களோ இதுவரையில் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் நாயகனாக அபிஷேக் ஷர்மா தெரிவானார்.

இந்நிலையில், பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.

நாளை ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

## இலங்கையை வெல்லுமா பங்களாதேஷ்?

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது சட்டோகிராமில் நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கை வென்ற நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கு இரண்டாவது போட்டியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் பங்களாதேஷ் காணப்படுகின்றது.



அதற்கு முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸனின் மீள்வருகை உதவினாலும் லிட்டன் தாஸுடன் மொமினுல் ஹக் தவிர்ந்த ஏனைய முன்வரிசை வீரர்களிடமிருந்து ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அணியில் காலிட் அஹ்மட்டை ஷகிப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக இலங்கையணியில் காயமடைந்த கசுன் ராஜிதவை ரமேஷ் மென்டிஸ் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.





# கண்டி அணி சாம்பியன்

ஹேமாஸ் பாமசூட்டிகல்ஸ் அனுசரணையில் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் கொழும்பு மாவட்டத்தின் வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடர் கொழும்பு ஹவ்லொக் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அணிகள் பங்குபற்றியிருந்த நிலையில் கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்ட அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அதில் கண்டி மாவட்ட அணி செம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

## வலைப்பந்தாட்டப் போட்டி

VIVEKANS NETBALL LEAGUE

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் பழைய மாணவிகளுக்கு இடையில் நடத்தும் வலைப்பந்தாட்ட போட்டிகள் கல்லூரியில், வெள்ளிக்கிழமை (29) காலை 8.30 முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளன.

பழைய மாணவர் சங்கத்தின் மகளிர் பிரிவு நடத்தும் இப்போட்டிகளில் ஐந்து அணிகள் தம்முடன் மோதும் வகையில் போட்டி, அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, மகளிர் தினத்தையொட்டி, ஏப்ரல் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 வரை கலை நிகழ்வுகள் பல நடைபெறவுள்ளன.

அன்றைய தினமே, வலைப்பந்தாட்ட இறுதி போட்டியும் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் நடைபெறும்.

## றியல் மட்ரிட்டிலேயே தொடரும் க்றூஸ்

ஸ்பானிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்திய களவீரரான டொனி க்றூஸ், கழகத்திலேயே தொடருவதற்கு ஓராண்டு ஒப்பந்த நீடிப்பைக் கைச்சாத்திடவுள்ளதாகக் கூறப்படுகிறது.



ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சிலிருந்து 2014ஆம் ஆண்டு மட்ரிட்டில் 34 வயதான க்றூஸ் இணைந்து இதுவரையில் 301 லா லிகா போட்டிகளில் விளையாடியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 29, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.